

விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம் முட்டத்தூர் கிராமத்தில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் வாக்காளர்களிடத்தில் உதயசூரியன் சின்னத்திற்கு தீவிர வாக்கு சேகரித்தார். உடன் விழுப்புரம் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் சேகர், செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், முட்டத்தூர் ஒன்றியக் கவுன்சிலர் முகிலன், முன்னாள் ஊராட்சி மன்றத் தலைவர் கருணாநிதி உள்ளிட் நிர்வாகிகள் உள்ளனர்.

### ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர்

# மா.பா.அன்புதுரை இல்லத் திருமண விழா! கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை!

## கழக இளைஞர் அணிச் செயலாளர் – அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வரவேற்புரை !

## அமைச்சர் பெருமக்கள் – கழக நிர்வாகிகள் வாழ்த்து !

சென்னை, ஜூன் 24-

சென்னை மேற்கு மாவட்டம், ஆயிரம் விளக்கு கிழக்குப் பகுதிக் கழகச் செயலாளர் மா.பா.அன்புதுரை - அ.சரஸ்வதி ஆகியோரின் புதல்வி அ.சூர்யாவிற்கும், சென்னை, கே.ஆர்.கணேஷ் - சுதா கணேஷ் ஆகியோரின் புதல்வர் ஆர்.ஜி.பிரவினுக்கும் திருமண விழா இன்று (24.6.2024 - திங்கட்கிழமை) காலை 9 மணியளவில், சென்னை - 28, இராஜா அண்ணாமலைபுரம், கிரீன்வேஸ் சாலையில் அமைந்துள்ள அருள்மிகு கபாலீஸ்வரர் கற்பகாம்பாள் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

திருமண விழாவினை கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் தலைமையேற்று நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் வரவேற்புரை ஆற்றுகிறார்.

திருமண விழாவில் அமைச்சர் பெருமக்கள், மாவட்டக் கழகச் செயலாளர்கள், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

### கள்ளக்குறிச்சி சம்பவத்தில் அன்புமணி இராமதாஸ் –

# இராமதாஸ் அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பதா?

## கழக சட்டமன்ற உறுப்பினர்கள் உதயசூரியன் - வசந்தம் கார்த்திகேயன் கண்டனம்!

சென்னை, ஜூன் 24-

கள்ளக்குறிச்சி சம்பவத்தில் இராமதாஸ், அன்புமணி இராமதாஸ் அரசியல் ஆதாயம் தேட முயற்சிப்பதற்கும் அவதூறான குற்றச்சாட்டுகளை கூறியதற்கும் தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

கள்ளக்குறிச்சி விவகாரத்தில் பா.ம.க.நிறுவனர் ராமதாஸ் மற்றும் அன்புமணி இராமதாஸ் ஆகியோர் பொய் குற்றச்சாட்டுகளை கூறி இறந்தவர்களின் வீட்டில் அரசியல் ஆதாயம் தேடுவதாக, தி.மு.க. எம்.எல்.ஏக்கள் வசந்தம் கார்த்திகேயன், உதயசூரியன் ஆகியோர் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.





சென்னை சட்டப் பேரவை வளாகத்தில் தி.மு.க. எம்.எல்.ஏக்கள் வசந்தம் கார்த்திகேயன், உதயசூரியன் ஆகியோர் கூட்டாக செய்தியாளர்களை சந்தித்தனர். அப்போது, கள்ளக்குறிச்சி சம்பவத்தில் பா.ம.க. நிறுவனர் இராமதாஸ் மற்றும் அன்புமணி இராமதாஸ் ஆகியோர் தங்கள் மீது அவதூறான குற்றச் சாட்டுகளை கூறியதற்கு கண்டனம் தெரிவித்தனர். கள்ளக்குறிச்சி விவகாரத்தில் பொய் குற்றச் சாட்டுகளை கூறி இறந்தவர்களின் வீட்டில் தந்தையும், மகனும் அரசியல் ஆதாயம் தேடுவதாக குற்றம் சாட்டிய அவர்கள்,

நாடாளுமன்றத் தேர்தல் தோல்வியால் ஏற்பட்ட விரக்தியில் பா.ம.க. நிறுவனர் இராமதாஸ் மற்றும் அன்புமணி இராமதாஸ் ஆகிய இருவரும் கள்ளக்குறிச்சி சம்பவத்தில் தங்கள் மீது அவதூறு குற்றச்சாட்டுக்களை பரப்புவதாக கண்டனம் தெரிவித்தனர். கள்ளக்குறிச்சி விவகாரத்தில் தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை நிரூபித்தால் பொது வாழ்விலிருந்து விலகத்தயார் என்றும், இவ்வாறு நிரூபிக்க தவறினால் ராமதாஸ் மற்றும் அன்புமணி இராமதாஸ் ஆகியோர் அரசியலிலிருந்து விலகுவார்களா என்றும் தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் வசந்தம் கார்த்திகேயன், உதயசூரியன் ஆகியோர் கேள்வி எழுப்பினர்.

தங்கள் மீது அவதூறு புகார்களை கூறிய பா.ம.க. நிறுவனர் இராமதாஸ் மற்றும் அன்புமணி இராமதாஸ் மீது நீதிமன்றத்தில் மான நஷ்ட வழக்கு தொடர உள்ளதாகவும் உறுதிப்பட தெரிவித்தனர்.

### கூல் பாயிண்ட் பி.பிரகாஷ் தலைமையில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா!

# சென்னை வடக்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் 600 நபர்களுக்கு அறுசுவை உணவு!

## ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ - கலாநிதி வீராசாமி எம்.பி - காசி முத்துமாணிக்கம் வழங்கல்!

சென்னை, ஜூன் 24 -

சென்னை வடக்கு மாவட்ட வர்த்தக அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு 600 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கும் விழா இன்று (24.6.2024 திங்கட்கிழமை) மதியம் 12 மணியளவில், பெரம்பூர், லட்சுமி அம்மன் நகர், அவர்லேடி பள்ளி அருகில் நடைபெறுகிறது.

மாவட்ட வர்த்தக அணி அமைப்பாளர் கூல் பாயிண்ட் பி.பிரகாஷ் தலைமை வகிக்கிறார்.

பகுதிக் கழகச் செயலாளர்கள் க.ஜெயராமன், அ.முருகன், வட்டச் செயலாளர்கள் க.பாபு, ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி, மற்றும் எஸ்.சாக்ரடிஸ், என்.சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

வி.வி.தங்கராஜ், எஸ்.மணிகண்டன், கே.அசோக், எம்.பிரேம்குமார், ஜெ.தினேஷ் குமார், என்.டி.சேகர், ஆர்.டி.கார்த்தி, எஸ்.பொன்ராஜ், துரைராஜ், ஜி.ஹரிராமன், கு.தமிழ்செல்வன், எம்.ஆர்.பி.பழனி, எஸ்.சுப்பிரமணி, பில்டர் பி.ரவி, பி.ஜானி, என்.ராஜேந்திரன், க.அரிமூர்த்தி, கே.எம்.குழந்தைசாமி, என்.சரவணன், எச்.மோகனா, எம்.மதிவாணன், கே.ஜி.சீனி வாசன், துரை பாஸ்கர், வி.முரளிதரன், எம்.எஸ்.முருகன், மு.ஒய்லர், கே.வி.சோமசுந்தரம், ஆர்.ரம்ஜான்பிவி, ஆர்.செல்வகுமார், வி.ரமேஷ்குமார், ஜி.கணேஷ், எம்.ஏ.சந்திரன், ஏ.அந்தோணி சார்லஸ், சி.குணசேகரன் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சென்னை வடக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி எம்.பி. மாநில வர்த்தக அணிச் செயலாளர் காசி முத்துமாணிக்கம் ஆகியோர் கலந்து கொண்டு அறுசுவை உணவு வழங்குகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் ஜே.ஜே. எபினேசர் எம்.எல்.ஏ, ஐட்ரீம் இரா.மூர்த்தி எம்.எல்.ஏ, இரா.கருணாநிதி, பி.டி.பாண்டிசெல்வம், இரா.நரேந்திரன், எஸ்.ஜெபதாஸ் பாண்டியன், இரா.லட்சுமணன், வ.பெ.சுரேஷ், இரா.செந்தில்குமார், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், வி.தயாளன், ஏ.தமிழ்செல்வன், டி.கம லக்கண்ணன், ப.மதிவாணன், க.அமுல், ந.சர்பஜெயதாஸ், சர்மிளா காந்தி கருணாநிதி, சி.ஆனந்தி மற்றும் மாவட்ட, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் பலர் கலந்துக் கொண்டு சிறப்பிக்கின்றனர்.

மாவட்டப் பிரதிநிதி ச.சச்சிதானந்தம், பகுதி தொண்டர் அணி துணை அமைப்பாளர் பெப்சி டி.சங்கர், கழகச் செயல்வீரர் டீக்கடை எஸ்.முருகன் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

# சட்டப்பேரவையில் குறள்!



சட்டமன்றப் பேரவையில் நேற்று முன்தினம், பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் படித்த குறளும், அதற்கான கலைஞர் உரையும் வருமாறு:-

**குறள்:**

**“உழுவார் உலகத்தார்க் காணியஃ தாற்றா**
**தெழுவாரை எல்லாம் பொறுத்து.”**

**கலைஞர் உரை :** பல்வேறு தொழில் புரிகின்ற மக்களின் பசி போக்கிடும் தொழிலாக உழவுத்தொழில் இருப்பதால் அதுவே உலகத்தாரைத் தாங்கி நிற்கும் அச்சாணி எனப்படும்.





விக்கிரவாண்டி தொகுதி வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவா (எ) சிவசண்முகத்தை ஆதரித்து. மாவட்ட பொறுப்பாளர் டாக்டர் பொன் கௌதமசிகாமணி, விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம், அய்யூர் அகரம், சிந்தாமணி, வடகுச்சிப்பாளையம், கப்பியாம்புலியூர், செங்கமேடு, பனையபுரம், பனப்பாக்கம், தொரவி, ஆவுடையார் பட்டு, கயத்தூர் , ரெட்டிக்குப்பபம் ஆகிய ஊராட்சிகளில் உதயசூரியன் சின்னத்திற்கு வீதி, வீதியாக வாக்குகளைச் சேகரித்தனர். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட பொருளாளர் இரா ஜனகராஜ், மாநில ஆதிதிராவிடர் நலக்கழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், ஒன்றியச் செயலாளர் ஜெய.ரவிதுரை, பி.கே.டி.முரளி, மைதிலி இராஜேந்திரன், ஜெ.ஜெயபால், ஒன்றிய குழுத் தலைவர்கள். சங்கீதா அரசி ரவிதுரை, ஆர்.எஸ்.வாசன், உஷா பி.கே.டி முரளி , செயற்குழு உறுப்பினர் கோ.பாஸ்கரன், பொதுக்குழு உறுப்பினர் இளங்கோவன், விசிக திலிபன் , அய்யூர் அகரம் ஏ.கே.எஸ். இராஜேந்திரன் ஒன்றிய நிர்வாகிகள் பொருளாளர் கண்ணையன், துணைச் செயலாளர் நாவப்பன், பாஸ்கர், மாவட்ட பிரதிநிதிகள் சாம்பசிவம், ராஜமாணிக்கம், தன்ராஜ், சபரி, செல்வராஜ் , முன்னாள் இளைஞர் அணி எத்திராசு, மாவட்ட ஊராட்சி குழுஉறுப்பினர் மீனா வெங்கடேசன், இளைஞர் அணி செ.தினகரன், பாரதி , தகவல் தொழில்நுட்ப ரகுபதி, கப்பியாம்புலியூர் சதாநந்தம் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# “எங்கள் வாழ்க்கையில் ஒளிவிளக்கேற்றிய முதல்வர்!”

## நாமக்கல் மாவட்ட திருநங்கைகள் நெஞ்சார்ந்த நன்றி!

நாமக்கல், ஜூன் 24 -

திருநங்கைகளும் இந்த சமுதாயத்தில் ஓர் அங்கம் என்பதை உணர்ந்து, முதல் மாநிலமாக “தமிழ்நாடு இந்தியாவிலேயே திருநங்கைகள் நலவாரியத்தை” 15.4.2008 அன்று தமிழ்நாடு அரசால் ஏற்படுத்தப்பட்டது. திருநங்கைகளின் நலன், சமூக பாதுகாப்பு, சமூக அங்கீகாரம் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பல்வேறு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

திருநங்கைகளின் நலனை மேம்படுத்தும் விதமாக, “திருநங்கைகள்” என்ற கைபேசி செயலி உருவாக்கப்பட்டு அவர்களது சுய விவரங்கள் பதிவு செய்யப்பட்டு அடையாள அட்டை பெறுவது எளிமையாக்கப்பட்டுள்ளது. திருநங்கைகள் நலவாரியத்தின் மூலம் திருநங்கைகள் அடையாள அட்டை, குடும்ப அட்டை, வீட்டு மனை பட்டா, குடியிருப்பு வீடுகள், தையல் இயந்திரம், உயர் கல்வி உதவித் தொகை, சுய உதவி குழுக்கள் உருவாக்குதல் உள்ளிட்டவற்றைக்கு வழி வகை செய்யப்பட்டுள்ளது. மேலும், திருநங்கையர் வாழ்வாதாரத்தினை உயர்த்திடும் வகையில் தொழில் செய்திட மானியத் தொகை ரூ.50,000/ மாதாந்திர ஓய்வூதியமாக ரூ.1,500/ வழங்கப்பட்டு வருகிறது.

திருநங்கையர்களை ஊக்குவிக்கும் விதமாக, திருநங்கையர் தினமான ஏப்ரல் 15அன்று ஒரு திருநங்கைக்கு ரூ.1,00,000/க்கான காசோலை மற்றும் சான்றிதழ் அடங்கிய மாநில அளவிலான “திருநங்கைக்கான விருது 2020 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டு வருகிறது. திருநங்கைகளின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் வகையிலும், திருநங்கைகளுக்கு வேலை வாய்ப்புகளை அதிகரிப்பதற்கும். திருநங்கைகளுக்கு சென்னை அண்ணா மேலாண்மை நிறுவனம் மூலம் திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

நாமக்கல் மாவட்டத்தில் இதுவரை 171 திருநங்கைகள் கண்டறியப்பட்டு அதில் 158 திருநங்கைகளுக்கு அடையாள அட்டைகள் வழங்கப்பட்டுள்ளது. 40 வயதிற்கு மேல் உள்ள50திருநங்கைகளுக்கு ஓய்வூதியம் மாதம் ரூ.1,500/ ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இதுவரை 12 திருநங்கைகளுக்கு அவர்களது வாழ்வாதாரத்தை உயர்த்தும் விதமாக சுயதொழில் மானியம் தலா ரூ.50,000/ வீதம் மொத்தம் ரூ.6,00,000/ வழங்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து மாவட்டங்களிலும் திருநங்கைகளின் நலனை கருத்தில் கொண்டு, அவர்களுக்கு ஒரே இடத்தில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கிட ஏதுவாகவும், பிற துறைகளின் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விதமாகவும் திருநங்கைகளின் விவரங்களை பதிவு செய்து அடையாள அட்டை, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டை மற்றும் வாக்காளர் அடையாள அட்டைகள் வழங்கிடும் வகையில் அனைத்து துறைகளையும் ஒருங்கிணைத்து திருநங்கைகளுக்கான சிறப்பு முகாம் நடத்திட வேண்டுமென உத்தர விட்டுள்ளார்.

அதனைத் தொடர்ந்து, நாமக்கல் மாவட்டம், துறையூர் சாலை, நாமக்கல் நகராட்சி திருமண மண்டபத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில் நடைபெற்ற திருநங்கைகளுக்கான சிறப்பு முகாமில், மாவட்ட ஆட்சித்தலைவர் மருத்துவர் ச.உமா தலைமையில், நாமக்கல் மேற்கு மாவட்ட திமுக செயலாளரும், நகரமைப்பு மண்டல திட்டக்குழு உறுப்பினருமான எஸ்.எம்.மதுராசெந்தில் முன்னிலையில், நாமக்கல் கிழக்கு மாவட்ட திமுக செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்டம் மத்திய கூட்டுறவு வங்கி தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் 46 திருநங்கைகளுக்கு ரூ.3.93 இலட்சம் மதிப்பில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநில திமுக சமூக வலைதள பொறுப்பாளரும், திருநங்கை நலவாரிய குழு உறுப்பினருமான அ.ரியா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**இம்முகாமில் பயன்பெற்ற திருநங்கை ரேவதி கூறும்போது**, நான் மாதிரிப்பள்ளிகளில் ஆளுமை வளர்ச்சி மேற்கொள்ளப்படும் அணியில் பணிகள் மேற்கொண்டு வருகிறேன். இன்றைக்கு எனது சொந்த ஊரில், நான் பிறந்த ஊரில் நாமக்கல்லில் திருநங்கைகளுக்கான முகாம் நடைபெற்று வருகிறது. இந்தியாவிலேயே திருநங்கைகள் நலவாரியத்தை” முதல் முதலாக தமிழ்நாட்டில் கலைஞர் அவர்களால் ஏற்படுத்தப்பட்டது. அதே வழியில் தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றவுடன் திருநங்கைகளுக்கு பல்வேறு திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வருகின்றார்கள். அந்த வகையில் மாதாந்திர ஓய்வூதியம், கட்டணமில்லா பேருந்து பயணம் உள்ளிட்ட எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். மேலும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திருநங்கைகளுக்கு வேலை வாய்ப்பில் இட ஓதுக்கீடு செய்வதற்கு முயற்சி மேற்கொண்டு வருகிறார்கள். இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை எங்களுக்காக கொண்டு வந்த தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி.

**திருநங்கை ஆர்த்தி கூறும்போது**, நான் நாமக்கல் பகுதியில் வசித்து வருகிறேன். திருநங்கைகளின் நலனை மேம்படுத்தும் விதமாக ஒரே இடத்தில் அடையாள அட்டை, முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு அட்டை, வாக்காளர் அடையாள அட்டை ஆகியவை பெறுவதற்கு நாமக்கல் மாவட்ட திருநங்கைகளுக்கு சிறப்பு முகாமினை ஏற்படுத்தி கொடுத்துள்ளார்கள். மேலும் இம்முகாமில் எங்களுக்கு தையல் இயந்திரம், பட்டா மாறுதல் உள்ளிட்ட பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியுள்ளார்கள். எங்கள் நலனில் அக்கறை கொண்டு இதுபோன்ற எண்ணற்ற திட்டங்களை செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சருக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.





விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி, விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம் , பொன்னங்குப்பம் , வி.சாத்தனூர், மேலக்கொந்தை ஆகிய ஊராட்சிகளில் விக்கிரவாண்டி தொகுதியின் இடைத்தேர்தலில் கழக வேட்பாளர் அன்னியூர் சிவா (எ) சிவசண்முகத்தை ஆதரித்து விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி அவர்கள் தலைமையில் டெல்லி தமிழக அரசின் சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், முன்னாள் அமைச்சர் ஆவடி நாசர் ஆகியோர் உதயசூரியன் சின்னத்திற்கு வீதி, வீதியாக வாக்குகளைச் சேகரித்தனர். மாவட்ட ஊராட்சி குழுத் தலைவர் ம.ஜெயசந்திரன், மாநில ஆதிதிராவிடர் நலக்கழு இணைச் செயலாளர் செ.புஷ்பராஜ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் அப்துல் மாலிக், மாநில மாணவர் அணி துணை அமைப்பாளர் ஜெரால்டு, ஒன்றிய செயலாளர்கள் ஜெ.ஜெயபால், கே.எஸ்.ராஜி, வே.கணேசன், கு.செல்வமணி, ஆண்டிமடம் ஒன்றியச் செயலாளர் கலியபெருமாள், விசிக மாவட்டச் செயலாளர் திலிபன், ஒன்றிய நிர்வாகிகள் பொன்னங்குப்பம் முரளி, தும்பூர் முரளி, வேல்முருகன், சாவித்திரி பாலு, ராம்குமார்,வி.சி.க ஒன்றிய விஜயகுமார், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர்கள். செ.தினகரன், கண்ணன் ஆனந்த், தாகப்பிள்ளை, விவசாய அணி சீனு செல்வரங்கம், சிறுபான்மை அணி டி.என்.ஏ.தமின் , தகவல் தொழில்நுட்ப அணி ப.அன்பரசு உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.